**கம்பஹா மாநகர சபை - 2022**
**-------------------------------------------**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கம்பஹா மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல் விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) பிரிவு 219 மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கம்பஹா மாநகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் மற்றும் காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை காசுப் பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்காக இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- மாநகர சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் மாநகர சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 நிதிக் கூற்றுக்கள் தயாரிப்பதில் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிக் கூற்றுக்களுக்குரிய கணக்கீட்டுக் கொள்கை 3.3 பிரகாரம் பரிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல்களின் மூலம் வருமானம் இனங் காணப்படுவது அவை அட்டுருவாகிய பின்னர் என காட்டப்பட்டிருந்த போதிலும் முத்திரைக் கட்டண வருமானத்தை கணக்கீடு செய்வதற்காக ஒரு நிச்சயிக்கப்பட்ட அடிப்படையொன்று பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டண சிட்டையிடப்பட்ட வருமானம், வருமானம் என அட்டுரு அடிப்படையின் கீழ் ரூபா 123 மில்லியன் தொகையொன்று கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என. | அட்டுரு அடிப்படையின் கீழ் நடைமுறை ஆண்டிற்குரிய வருமானம் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

#### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசினால் மேற்கொள்ளப்படும் மாற்றங்கள் வருவாய் ஒன்றென, 2020 ஆண்டின் ரூபா 66,965,713 தொகை பிழையான முறையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டில் ரூபா 6,616,947 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. இந்தத் | சபைக்கு வருமானம் ஒன்றென காணப்பட்டமையால் ‘‘வருமானமொன்று’’ என கணக்கீடு செய்யப்பட்டது. அந்த மானியங்களில் இருந்து உருவாகிய சொத்துக்கள் பெறுமானத் தேய்வு செய்யப்பட்டன என. | மூலதன மானியங்கள் கிடைத்த வருடத்தின் பின்னைய ஆண்டு முதல் உரிய பெறுமானத் தேய்வு சதவீதத்தின் கீழ் வருவாய் ஒன்றென கணக்கீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | தவறினை மீளாய்வாண்டின் கணக்குகளின் மூலம் சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் மீண்டுவரும் அல்லாத செலவுகளுக்காக அரசினால் மாற்றப்பட்டிருந்த ரூபா 6,443,786 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி நியவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 9.5 பிரகாரம் கிடைத்த மானியம் அந்த ஆண்டிலேயே வருவாய் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டதென. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டிற்கான அகழ்விரிவான வருமானம் ரூபா 6,443,786 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 52,640 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்கள் சரியானவை வட்டி சதவீதம் வங்கியினால் உறுதிப்படுத்திய பின்னர் சீராக்கல் மேற்கொள்ளப்படும் என. | வட்டி வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 06 வருமான விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை, நிதிக் கூற்றுக்கள் மற்றும் நிலுவை வருமானக் கூற்று இடையே ரூபா 4,333,755 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | நிதிக் கூற்றுக்களின் படி நிலுவைத் தொகை சரியானதாக காணப்படுவதுடன் நிலுவை வருமானக் கூற்றை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | வித்தியாசங்களை இனங் கண்டு சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) நிதிக் கூற்றுக்களின் படி 07 கணக்கு விடயங்களின் மீதிகளின் கூட்டுத்தொகை மற்றும் அட்டவணைகளின் படி மீதிகளின் கூட்டுத்தொகை இடையே ரூபா 6,480,924 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | யக்கல உப அலுவலகத்தின் நிலுவைத் தொகை என கணித்திருக்கவில்லை என. | - மேற்படி - |

### 1.6.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 8,633,172 தொகைக்கான 5 மீதிகள் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | பதிவேடுகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | பதிவேடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1946 இன் 30 இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீட்டு கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20 | 2005 மற்றும் 2011 ஆண்டுகளின் போது மேற்கொள்ளப்பட்ட பெறுமதி மதிப்பீட்டை அடிப்படையாக கொண்டு நடைமுறை ஆண்டிற்கான வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | இந்த விடயம் 2023 திசெம்பர் அளவில் பூர்த்தி செய்து 2024 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | வீதவரிக்கான ஆதன மதிப்பீடு மேற்கொண்டு அதன்படி, வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | **2155/6 மற்றும் 2019 திசெம்பர் 24 திகதிய அதிவிஷேட வர்த்தமானியின் படி மாநகர சபைகளின் நிதி நிருவாகத்திற்குரிய கணக்கு அலுவல்கள் தொடர்பான கட்டளை** | | | |
| | (i) 08 | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 23 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2023 மார்ச் 23 திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்படுகின்றது எனவும், அடுத்த வருடம் குறிப்பிட்ட திகதியில் வழங்கப்படும் எனவும். | பெப்ரவரி 28 திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| | (ii) 83 II | அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்களுக்காக முற்பணக் கணக்கொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அலுவலக ஊழியர்களுக்கான கடன் கணக்கு நாளதுவரை ஆக்கப்பட்டு பேணப்படுகின்றது என. | கட்டளைகளின் படி முற்பணக் கணக்கொன்று பேணப்பட வேண்டும். |
| | (iii) 306 | அறவீடு செய்யப்படுகின்ற காணி விற்பனவு மீதான வரி தொடர்பாக தகவல் பதிவேடொன்று பேணிச் சென்றிருக்கவில்லை. | எதிர் காலத்தில் தகவல்கள் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பதிவேடொன்று தயாரிக்கப்பட்டுள்ளது என. | தகவல்கள் பெற்றுக்கொள்ளக் கூடியவாறு பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| | (i) 396 (ஆ) | பல வருட காலமாக காணப்படும் 8 மதிப்பளிக்கப்படாத காசோலை தொடர்பான ரூபா 356,560 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களின் படி காசாக அறவீடு செய்வதற்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) 396 (ஈ) | ரூபா 328,793 தொகைக்கான கால வதியான 06 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தொடர் நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |
| (iii) 571(1) மற்றும் (2) | 1977 ஆண்டு முதல் காணப்படுகின்ற ரூபா 57,798,854 தொகைக்கான 02 வருடங்களை மிகைத்துள்ள வைப்புக்களை ஆதனவழிப்பு செய்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் கொடுப்பனவு செய்வதற்காக வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட வேண்டும் என.. | நிதிப் பிரமாணங்களின் படி வைப்புக்கள் ஆதனவழிப்பு செய்யப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 53,423,602 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை மிகைத்த வருமானம் ரூபா 205,354,800 தொகையாக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாதாந்தம் முதிர்வடையும் ரூபா 67,359,947 தொகை பெறுமதியான 07 நிலையான வைப்புக்கள் முதிர்வடைந்து 08 முதல் 17 நாட்கள் வரையான காலம் கடந்திருந்த பின்னர், திருப்பப் பெற்றிருந்தனால் அந்தக் காலப் பகுதிக்குரிய வட்டி வருமானத்தை இழந்திருந்ததுடன், சாதாரண சேமிப்பு வட்டி வருமானம் ஒன்றும் கிடைத்திருக்கவில்லை. | சரியானது. சபையின் அவசர நிதித் தேவையை பூர்த்தி செய்வதற்காக நகர முதல்வரின் கட்டளைப்படி செயற்பட்டிருந்தன என. | வட்டி வருமானத்தை இழக்காத வகையில் நிலையான வைப்புக்கள் திருப்பிப் பெற வேண்டும். |
| (ஆ) 2016 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரையான காலப் பகுதிக்குரிய, மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 123,108,175 தொகை, முத்திரை வருமானம் என மீளாய்வாண்டில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2023 ஆண்டில் பாதீட்டு முத்திரை வருமானம் ரூபா 120,000,000 தொகை எனினும், அவற்றில் 98 சதவீதமாகிய ரூபா 117,562,605 தொகை மீளாய்வாண்டின் முற்பணம் என பணமாக பெற்று அதனை வருமான முற்பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2021 ஆண்டில் பெற்றிருந்த முற்பணத்தை போல 249 சதவீதத்தை கொண்ட பாரிய நூற்றுவீதமாக இருந்தது. | 2022 ஆண்டில் பெற வேண்டிய சிட்டையிடப்பட்ட வருமானத்திற்கு மேலதிகமாக கிடைத்த பணம் வருமான முற்பெறுவனவு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது என. | முற்பணங்கள் பெற்றுக்கொள்ளும் போது தொடர்ந்து வரும் ஆண்டிற்கான காசுப் பாய்ச்சலுக்கு ஏற்படும் தாக்கம் தொடர்பாக கவனம் செலுத்த வேண்டும். |

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

நகர ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையிடப்பட்ட வருமானம்** | **சேகரிக்கப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரி மற்றும் வரி | 84,501,500 | 102,621,334 | 70,352,564 | 89,286,429 | 84,003,000 | 89,805,713 | 47,742,228 | 76,279,551 |
| (ii) | வாடகை | 38,670,000 | 40,507,851 | 25,684,786 | 45,108,379 | 39,100,000 | 39,699,223 | 24,289,465 | 36,499,966 |
| (iii) | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 5,800,000 | 5,365,608 | 4,974,608 | 717,427 | 4,000,000 | 3,966,099 | 3,866,099 | 417,427 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 367,411,000 | 464,185,713 | 463,168,538 | 84,503,489 | 499,729,000 | 390,282,460 | 217,847,126 | 88,051,101 |
| | **மொத்தம்** | **496,382,500** | **612,680,506** | **564,180,496** | **219,615,724** | **626,832,000** | **523,753,495** | **293,744,918** | **201,248,045** |

### 2.3.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **வீதவரியும் வரியும்** | | |
| (i) | மீளாய்வாண்டின் வீதவரி சிட்டையிடல் பெறுமதி ரூபா 74,732,223 தொகை மற்றும் அறவீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 45,580,286 தொகையாக காணப்பட்டமையால், அறவீடு செய்யப்படாத பெறுமதி 39 சதவீதமாக இருந்தது. | 2022 ஆண்டின் அனைத்து காலாண்டு இறுதியில் சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது என. | சட்டத்தின் படி வீதவரி வருமானம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ii) | மீளாய்வாண்டு ஆரம்பத் தினத்திலுள்ளவாறு நிலுவை வீதவரி பெறுமதி ரூபா 70,222,910 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது அறவீடு | அனைத்து காலாண்டு இறுதியிலும் வருமான பரிசோதக உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் ரூபா 50,000 ஐ | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்ட பெறுமதி ரூபா 19,024,468 தொகையாக காணப்பட்டமையால் அறவீடு செய்யப்படாத சதவீதம் 73 ஆகும். | விட கூடிய நிலுவை அட்டவணைக்கு சிவப்பு அறிவித்தல் வழங்கப்பட்டிருந்தது என. | |

**(ஆ) களியாட்ட வரி**

| | | | |
|---|---|---|---|
| | களியாட்ட வரி சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 2,466,833 தொகையில் மீளாய்வாண்டின் போது எத் தொகையேதும் அறவீடு செய்திருக்காததுடன், வருட ஆரம்ப திகதியில் உள்ளவாறு நிலுவை களியாட்ட வரி பெறுமதி ரூபா 5,200,451 தொகையில் ஆண்டின் போது அறவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 27,425 தொகையாக இருந்தது. | இந்த நிலுவை 05 திரைப்படக் காட்சி சாலைகளின் நிலுவையாகும். மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டும். |

**(இ) அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் நிலுவையாக காணப்பட்ட வியாபார அனுமதிப்பத்திர கட்டணத்தின் பெறுமதி ரூபா 417,427 தொகையில் அறவிடப்பட்டிருந்த பெறுமதி ரூபா 91,000 தொகையாகும். | 07 அனுமதிப்பத்திரதாரர்களின் நிலுவைத் தொகைகளை பதிவழிப்பதற்காக அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளதுடன், ஏனைய அனுமதிப்பத்திரதாரர்களுக்காக சட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவை அனுமதிப்பத்திரக் கட்டண வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

**(ஈ) வாடகை**

| | | | |
|---|---|---|---|
| (i) | வர்த்தக நிலைய வாடகை ஆண்டின் போது சிட்டையிடப்பட்ட பெறுமதி ரூபா 33,730,902 தொகை மற்றும் அறவீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 21,056,412 தொகையாக காணப்பட்டமையால் அறவீடு செய்யப்படாத சதவீதம் 38 ஆக இருந்தது. | மக்களின் கோறிக்கையின் படி மற்றும் அரசியல் தலையீட்டின் காரணமாக சலுகைகள் வழங்கப்பட்டது. நிலுவையை அறவீடு செய்வதற்காக அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பதில் கிடைக்காவிடின் மீண்டும் சீல் வைத்து உரித்தாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வியாபார நிலைய வாடகை வருமானம் அறவீடு செய்ய வேண்டும். |
| (ii) | நிலுவை வியாபார நிலைய வாடகை, மீளாய்வாண்டு ஆரம்ப தினத்திலுள்ளவாறு பெறுமதி ரூபா 26,028,316 தொகை மற்றும் அறவீடு செய்யப்பட்ட தொகை ரூபா 6,134,214 தொகையாக காணப்பட்டமையால் அறவீடு செய்யப்படாத சதவீதம் 76 ஆக இருந்தது. | மக்களின் கோறிக்கையின் படி மற்றும் அரசியல் தலையீட்டின் காரணமாக சலுகைகள் வழங்கப்பட்டது. நிலுவையை அறவீடு செய்வதற்காக அறிவுருத்தல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பதில் கிடைக்காவிடின் மீண்டும் சீல் | நிலுவை வியாபார நிலைய வாடகை வருமானம் அறவீடு செய்ய வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வைத்து உரித்தாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | |
| (iii) | உடைத்து அகற்றப்பட்டிருந்த பொதுச் சந்தையின் 142 கடையறைகளில் இருந்து நிலுவை கடை வாடகை ரூபா 2,311,107 தொகை 2022 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும் அறவீடு செய்யப்படாமல் காணப்பட்டதுடன், அவற்றில் 97 கடை உரிமையாளர்களிடம் நிலுவை கடை வாடகையை அறவீடு செய்யப்படாமல் 98 தற்காலிக கடையறைகளிற்கான வாடகை உடன்படிக்கை மேற்கொண்டு வழங்கப்பட்டிருந்தது. | எதிர் காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை கடை வாடகை அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (iv) | கம்பஹா மாநகர சபைக்கு சொந்தமான 30 கடையறைகள் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஜனவரி 16 திகதி வரை டெண்டர் மூலம் வாடகைக்கு கொடுத்திருக்கவில்லை. | சிக்கல்கள் தீர்க்கப்பட்ட கடையறைகளை எதிர்காலத்தில் டெண்டர் பண்ணப்படும் என. | கடையறைகளை வாடகைக்கு கொடுத்து வாடகை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | யக்கல வர்த்தகத் தொடர் கட்டிடத்தின் பழைய வாடகையாளர்கள் ஐந்து பேரிடம் மற்றும் புதிய வாடகையாளர்கள் நான்கு பேரிடம் மொத்த நிலுவை சாவிக் காசு ரூபா 8,138,394 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. இவற்றில் பழைய வாடகையாளர்களின் 3 கடையறைகளில் இருந்து நிலுவை சாவிக் காசு ரூபா 3,022,141 தொகை காணப்பட்ட போது புதிய வாடகையாளர்கள் என மேலும் ஒரு கடையறை வழங்கப்பட்டிருந்தது. | இது வரை சாவி வழங்கப்பட்டிருக்கவில்லை. நிலுவைத் தொகையை செலுத்தி சாவியை பெற்றுக்கொள்ளும் படி எழுத்துமூலம் அறிவித்த போதிலும் இதுவரை செலுத்தியிருக்கவில்லை. சபை தீர்மானம் ஒன்றின் மூலம் 56 இலக்க கடையறை வழங்கப்பட்டிருந்ததென. | சாவிக் காசு நிலுவைத் தொகையை அறவீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | வாடி வீட்டு வாடகை மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் காணப்பட்ட பெறுமதி ரூபா 5,954,355 தொகை மற்றும் ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 1,364,225 தொகையாக காணப்பட்டமையால் மொத்த நிலுவை பெறுமதி ரூபா 7,318,580 தொகை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் உரித்தக்கப்பட்டிருந்ததுடன் வாடகையாளர் மற்றும் ஏனைய தரப்பினருக்கு இடையே வழக்கு அலுவல்கள் நடைபெறுவதனால் அந்த தீர்மானத்தின் பின்னர் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது என. | நிலுவை வாடி வீட்டு வாடகை வருமானம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

(எ) **குத்தகை**

| | | |
|---|---|---|
| மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் காணப்பட்ட குத்தகைப் பெறுமதி ரூபா 4,439,346 தொகையில் எத் தொகையேனும் அறவீடு செய்திருக்கவில்லை. | ரூபா 1,576,029 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக தற்போது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிலுவை குத்தகை வருமானம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

(ஏ) **ஏனைய வருமானங்கள்**

| | | |
|---|---|---|
| நிலுவை ஏனைய வருமான மீதி மீளாய்வாண்டு ஆரம்ப தினத்தில் உள்ளவாறு பெறுமதி ரூபா 88,051,101 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டின் போது அறவீடு செய்யப்பட்டிருந்த பெறுமதி ரூபா 4,564,787 தொகையாக இருந்தது. | நிலுவைத் தொகையில் பாரிய எண்ணிக்கை அடிப்படையில் தெரிவு செய்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை ஏனைய வருமானங்கள் அறவீடு செய்யப்பட வேண்டும். |

(ஐ) **நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| | | |
|---|---|---|
| 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான முத்திரைக் கட்டண அட்டவணைகள் மற்றும் கம்பஹா நீதிவான் நீதிமன்றத்தின் 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான நீதிமன்றத் தண்டப் பண அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப் பணம் காலவிதிப்பின் கீழ் 3 வருடங்களுக்குள் அறவீடு செய்யப்பட வேண்டும். | அட்டவணைகள் தயாரிக்கப்பட்டு உரிய வருமானங்களை கணக்கீடு செய்து அறவீடு செய்ய வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்பு** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கைத் திட்டத்தில் பாதீட்டிற்கு ஒத்த நிகழ்வாக அனைத்து விடயங்களினதும் ஏற்பாட்டுப் பெறுமதி உட்படுத்தப்பட்டு, காலாண்டு அடிப்படையில் பௌதீக மற்றும் நிதி இலக்குகள் காட்டப்பட்டிருக்காததுடன், மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தின் படி முன்னேற்றம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் அந்த தகவல்கள் காலாண்டு அடிப்படையில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி வருடாந்த முன்னேற்றம் தயாரிக்கப்பட்டுள்ளது என. | செயல் நடவடிக்கைத் திட்டம் சரியாக தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பஹா பிரதான அலுவலகம் தொடர்பாக 2018 மார்ச் 16 திகதி மற்றும் 2015 ஜூலை 08 திகதி ஆகிய நாட்களிலும், யக்கல உப அலுவலகம் தொடர்பாக 2019 ஜூன் 19 திகதியும், நூற்றிற்கு 1 காணிகள் விற்பனை வரி என தனியார் கம்பனி ஒன்றினால் முறையே ரூபா 1,134,100 தொகை, ரூபா 1,054,342 தொகை மற்றும் ரூபா 8,397,175 தொகை மா நகர சபைக்கு செலுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக விளையாட்டுத்துறை மற்றும் களியாட்ட அலுவல்களுக்காக ஒதுக்கப்படுகின்ற 10 சதவீத காணியின் அளவு (பொதுக் காணி) காணி உறுதி 2023 ஜூன் 16 திகதியளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒரு ஏக்கருக்கு கூடிய காணிகள் நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அங்கீகரிக்கப்படுவதுடன் நகர அபிவிருத்தி அதிகார சபையில் இருந்து இந்த காணிகள் தொடர்பாக தகவல்களை பெற்று எதிர்காலத்தில் இந்த காணியை உரித்தாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | 10 சதவீத தரைக்கான காணி உறுதிகள் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்கு சொந்தமான 13 வாகனங்களுக்காக 1993 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை கொள்வனவு செய்யப்பட்டிருந்த அல்லது கிடைத்திருந்த நாள் முதல் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஜனவரி 18 திகதி வரை எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்காததுடன், அனைத்து சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகங்கள் உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது அனைத்து வாகனங்களினதும் எரிபொருள் எரிவுப் பரிசோதனை அலுவல்கள் மற்றும் வாகனங்களின் சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகங்கள் நாளதுவரை ஆக்கல் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | எரிபொருள் எரிவுப் பரிசோதனை மற்றும் அனைத்து சம்பவக் குறிப்பேட்டுப் புத்தகங்களும் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

### 3.4 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | உத்தியோகபூர்வ வாசஸ்தலம் ஒன்று பயன்படுத்தப்படாமையால் அழிவடைந்து காணப்பட்டதுடன் உயிர்வாயு அலகு விளைவற்று காணப்பட்டது. | அப்புறப்படுத்த வேண்டிய பண்டங்களை அகற்றிய பின்னர் உத்தியோகபூர்வ வாசஸ்தலங்களை உடைத்து அகற்ற வேண்டும். உயிர்வாயு பெற்றுக் கொள்ளல் மறுக்கப்பட்டமையால் வாயு ஆகாயத்திற்கு விடுவிக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் வீடுகளுக்கு மற்றும் சிற்றுண்டிச் சாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் பயன்படுத்தக் கூடிய விதமாக பேணப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 3 டிரக்டர்கள், ஒரு டேலர் மற்றும் பாதை அதிர்வு தகர்க்கும் இயந்திரமொன்று 2022 ஜனவரி 22 திகதியளவிலும் விளைவற்றுக் காணப்பட்டது. | திருத்த வேலை அலுவல்கள் நடைபெறுவதுடன் பாதை அதிர்வு தகர்க்கும் இயந்திரம் எதிர்காலத்தில் அகற்றப்படும் என. | சொத்துக்கள் பயன்படுத்த முடியும் எனினும் திருத்த வேலை அல்லது அகற்றல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 2021 திசெம்பர் 31 திகதி மேற்கொள்ளப்பட்ட மோட்டார் வாகனம் மற்றும் இயந்திர உபகரண கணிப்பீட்டு அறிக்கையின் மூலம் விற்பனை செய்வதற்காக பரிந்துரைக்கப்பட்டிருந்த டேலர் ஒன்று மற்றும் டிரக்டர் ஒன்று 2023 ஜனவரி 25 திகதியளவிலும் உக்கிய நிலையில் காணப்பட்டது. | திருத்த வேலை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | கணிப்பீட்டு அறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கம்பஹா பிரதேச சபையில் இருந்து கம்பஹா மா நகர சபைக்கு 2006 ஏப்ரல் 28 திகதிய வர்த்தமானியின் மூலம் சொத்துக்கள் சாட்டுதல் செய்யும் போது, 3 மயானங்கள் தொடர்பாக உரித்தாக்கப்பட்ட காணியின் அளவு மற்றும் நிலஅளவைப் படத்தின் படி காணியின் அளவு 239.29 பர்சஸ்கள் குறைவாக இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன் என. | வித்தியாசத்திற்கான காரணத்தினை கண்டறிந்து அங்கீகாரமின்றிய காணிகள் கைப்பற்றுதல் அகற்றப்பட வேண்டும். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான ரூபா 1,597 மில்லியன் தொகை பெறுமதியான 20 மயானங்களுக்குரிய காணி உறுதிகளும், ரூபா 3,862 மில்லியன் பெறுமதியான 36 காணிகளுக்கான காணி உறுதிகள் மற்றும் நிலஅளவை படங்கள் காணப்படாததுடன் 14 மயானங்களுக்கான எல்லைகள் அடையாளப்படுத்தி இருக்கவில்லை. | தற்போது மயானங்களை அளவை செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | காணி உறுதிகள் மற்றும் நில அளவைப் படங்கள் தயாரிக்கப்பட்டு எல்லைகளை அடையாளப்படுத்த வேண்டும். |

### 3.6 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 ஆண்டிற்கான பெறுகைத் திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | குறைந்த வருமானமுடையவர்களுக்கு வினியோகிப்பதற்காக ரூபா 9,995,000 தொகை பெறுமதியான அரிசி கொள்வனவு செய்தல் | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | 2022 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இவ்வாறான வேலைத் திட்டம் ஒன்று காணப்படவில்லை. | நாட்டில் ஏற்பட்ட சீரற்ற பொருளாதார நிலைமை செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கும் சந்தர்ப்பத்தில் எதிர்வுகூற முடியாதிருந்தது. | செயல் நடவடிக்கை திட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் தேவைப்பாட்டின் படி திருத்தம் மேற்கொண்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (ii) | 33 பிரிவுகளில் ஒரு பிரிவில் குறைந்த வருமானமுடையவர் 100 இற்கும் 300 இற்கும் இடைப்பட்ட எண்ணிக்கையானவர்களுக்கு அரிசி வழங்குவதற்கு சபை அங்கீகரித்திருந்த போதிலும் நியாயமான அடிப்படை ஒன்றின் மீது குறைந்த வருமானம் உடையவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைந்த வருமானம் உடையவர் தெரிவு செய்யும் பொறுப்பு நகர முதல்வரினால் மந்திரமாருக்கு வாய்மொழி மூலம் வழங்கப்பட்டிருந்தது என. | நியாயமான அடிப்படையில் நலன்பெறுவோர் தெரிவு செய்யப்பட வேண்டும். |
| (iii) | சீல் வைக்கப்பட்ட கூறுவிலைகள் பதிவுத் தபால் மூலம் அல்லது டென்டர் பெட்டியில் போடுவதன் மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் Whatsapp செய்தி மூலம் கூறுவிலைகள் பெறப்பட்டு இருந்தமையால் அவற்றின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்பட்டிருக்கவில்லை. | அவசர விடயமென கணித்து நகர முதல்வரின் அறிவுரையின் படி நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தி (Whatsapp) கூறுவிலைகள் பெறப்பட்டன என. | சீல் வைக்கப்பட்ட கூறுவிலைகள் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| (iv) | சந்தை விலை நிர்ணயிக்கும் முறை மூலம் கூறுவிலை அழைக்கும் காலம் 07 நாட்களாக இருக்க வேண்டிய போதிலும் கூறுவிலைகள் அழைக்கும் தினத்திற்கு அடுத்த நாள் கூறுவிலைகள் ஏற்றுக் கொள்ளல் முடிவுறுத்தப்பட்டு பெறுகை தீர்மானத்தில் பதவியணி உத்தியோகத்தர் இருவர் மாத்திரம் கையொப்பமிடப்பட்டிருந்தது. | அவசர தேவைப்பாட்டின் மீது நகர முதல்வரின் அறிவுரை மற்றும் கட்டளையின் படி இவ்வாறு நடவடிக்கை எடுக்க நேரிட்டது என. | கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்கு போதியளவு காலம் வழங்கப்பட வேண்டும். |
| (v) | பண்டங்கள் வழங்கிய பின்னர் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பெறுகை வழிகாட்டல் கோவையில் பிரிவு 5.4.10(இ) இற்கு முரணாக செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக் கொள்ளாமல் ஒப்பந்த பெறுமதியில் 50 சதவீதமாகிய ரூபா 4,975,000 முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்தது. | சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரேரணை மற்றும் நகர முதல்வரின் எழுத்துமூல அறிவுரை மீது 50% முற்பணம் செலுத்தப்பட்டது என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |
| (vi) | அரிசி பைகள் 2 பொதிகளுடன் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக கூறுவிலை | இது தொடர்பாக நகர முதல்வருக்கு அறிவித்த போது பெற்றுக்கொள்ளும் | கூறுவிலை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு |

| | | | |
|---|---|---|---|
| | ஆவணங்களில் உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | படி அறிவுரை வழங்கப்பட்டதுடன் மாதிரிகள் PHI மூலம் பரிசோதனை செய்தல் பொருத்தமானது என பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. | கொள்வனவு செய்ய வேண்டும். |
| | (vii) அரிசி இரண்டு கொள்களன்கள் தரையில் இறக்காமல் மேல் வாரியாக மாத்திரம் பரிசோதனை செய்யப்பட்டிருந்தது. | வழங்கும் உத்தியோத்தர் மற்றும் களஞ்சிய பொறுப்பாளர் வாகனத்தில் ஏறி மொத்தமாக கணக்கிடப்பட்டிருந்தது என. | பண்டங்கள் கிடைக்கப் பெற்றன என உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். |
| (இ) | ரூபா 657,200 இற்கான பெறுமதியை உடைய கணினி மற்றும் கணினி உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | | |
| | (i) கணினி மற்றும் கணினி உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக விவரக் குறிப்புகள் தயாரித்திருக்காததுடன், கூறுவிலைகள் அழைப்பதற்கான குறைந்த காலம் 7 நாட்களாக இருந்த போதிலும் கூறுவிலைகள் அழைத்தல் முதல் கொடுப்பனவு அங்கீகரிக்கும் வரை அனைத்து விடயங்களும் 2022 ஜனவரி 03 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நகர முதல்வரினால் நேரடியாக கட்டளையிடப்பட்டு இருந்தது என. | கூறுவிலைகள் சமர்ப்பிப்பதற்கு போதியளவு காலம் வழங்கப்பட வேண்டும். |
| | (ii) கூறுவிலைகள் அழைக்கப்பட்டதற்கான சான்றுகள் காணப்படாததுடன், கூறுவிலைகள் அனுப்பியிருந்த 3 நிறுவனங்களில் 2 பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களாக இருக்கவில்லை. விலைகூறல்களை பெற்றுக் கொள்ளும் இறுதித் திகதி விலை கூறல்களை திறக்கும் திகதி மற்றும் நேரம் விலைகூறல் ஆவணங்களில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | விடயம் அவசரமாக இருந்தமையால் சந்தை விலை நிர்ணயிக்கும் முறை (Shopping) மூலம் கூறுவிலைகள் அழைக்கப்பட்டது என. | பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் கூறுவிலைகள் அழைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் விலைகூறல் ஆவணங்களில் குறிப்பிட்ட தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | ரூபா 1,401,000 தொகை பெறுமதியான கணினி மற்றும் கணினி உபகரணங்கள் கொள்வனவு செய்தல் | | |
| | (i) விலைகூறல் அழைப்பதற்காக குறைந்த காலவரையறை 7 தினங்களாக இருந்த போதிலும் 04 நாட்கள் மாத்திரம் வழங்கியிருந்ததுடன் பெறுகள் வழிகாட்டல் கோவையில் காணப்படாத சந்தை விலை நிர்ணயிக்கும் முறையில் கூறுவிலை அழைக்கப்பட்டிருந்தமையால் இரகசிய தன்மை பாதுகாக்கப்பட்டு இருக்கவில்லை. | கூறுவிலைகள் அழைக்கப்படல், தொழிநுட்ப மதிப்பாய்வுக் குழு அறிக்கை பெற்றுக் கொண்டு கட்டளையிடல் நகர முதல்வரின் அணவல் அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்பட்டது. | விலைகூறல்கள் சமர்ப்பிப்பதற்கு போதிய காலம் ஒன்று வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | முதலாவது தடவை கொள்வனவு செய்த நிறுவனத்தில் இருந்தே இரண்டாம் தடவையும் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் பண்டத் தேவைப்பாட்டினை ஏற்கனவே தீர்மானித்து ஒரே தடவையில் கொள்வனவு செய்யப்படாமையால் 03 மாதங்களுக்குள் கூறுவிலைகள் பாரிய அளவில் அதிகரித்து இருந்தமையால் சபைக்கு ரூபா 304,800 தொகை மிகையாக செலுத்த நேரிட்டிருந்தது. | ஆளுக்குரிய கோப்புக்கள் நாளதுவரை ஆக்கப்பட வேண்டியிருந்தமையால் கணினிகள் தேவைப்பட்டதுடன் நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை காரணத்தினால் விலைகள் வித்தியாசம் அடைந்திருந்தது. | திட்டமிடப்பட்டு ஒரே தடவையில் கொள்வனவு செய்ய வேண்டும். |

**3.7 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 18 திகதிய 29/2019 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் படி தற்காலிக, அமைய, பிரதியீட்டு, ஒப்பந்த அல்லது சலுகை அடிப்படை மீது சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குவதற்காக முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த போதிலும் 2019 நவம்பர் 19 திகதி 59 நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டு அதற்காக உரிய 2021 பெப்ரவரி 15 திகதி அங்கீகாரத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. வேலை/ வெளிக்கள/ சுகாதார தொழிலாளர்கள் 52 பேருக்காக 2023 ஜனவரி 10 திகதி வரையும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை. | நாட்டை முடக்குதல், பதவியணியினரை அழைத்தல் வரையறுக்கப்படல், அலுவலகங்கள் மூடப்படல், ஊழியர்கள் கொவிட் தொற்றால் பாதிக்கப்படல் காரணமாக அங்கீகாரத்திற்கு அனுப்புதல் தாமதம் அடைந்திருந்ததுடன் 2021, 2022 ஆண்டுகளுக்கான கடிதங்கள் அனுப்பபட்டு இருந்த போதிலும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என. | கால தாமதமின்றி கடிதங்கள் அனுப்பப்பட வேண்டியதுடன் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பஹா மா நகர சபையில் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுகாதார பிரிவில் நிரந்தர சம்பளம் பெறும் 97 சுகாதார தொழிலாளர்களில் 37 பேர் சுகாதார பிரிவிற்கு உரிய கடமைகள் அல்லாதவற்றில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், 14 பேர் சுகாதார நிருவாகி மற்றும் பதில் சுகாதார நிருவாகிகள் என ஈடுபடுத்தப்பட்டிருந்தமையால் 3,750 ஹெக்டயர் அளவான 33 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை கொண்ட சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்த சேவைக்காக நிரந்தர சம்பளம் பெறும் 46 சுகாதார தொழிலாளர்கள் மாத்திரம் ஈடுபடுத்துவதற்கு நேரிட்டிருந்தது. | ஏனைய பிரிவுகளுக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது அலுவலகத்தில் பல்வேறு பிரிவுகளுக்கான கடமைகளை நிறைவேற்றிக் கொள்ளல் மற்றும் அலுவலக உதவியாளர் சேவையில் வெற்றிடங்கள் காணப்பட்டது என. | சுகாதார பிரிவின் தொழிலாளர்கள் சுகாதார பிரிவின் அலுவல்களுக்கு மாத்திரமே ஈடுபடுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | செயற்திட்ட அடிப்படையின் கீழ் 75 ஊழியர்கள் அங்கீகாரமின்றி சேர்க்கப்பட்டு 2020 ஆண்டில் ரூபா 14,144,245 தொகையும், 2021 ஆண்டில் ரூபா 15,536,821 தொகையும் 2022 ஆண்டில் ரூபா 15,577,694 தொகையும் என கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டு இருந்த போதிலும் குறைபாடுகள் காரணமாக இணக்கம் தெரிவித்திருக்கவில்லை. | செயற்திட்டங்கள் மற்றும் செயற்திட்ட ஊழியர்கள் அங்கீகரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | வடிகால்களை சுத்தம் செய்வதற்காக 8 செயற்திட்ட தொழிலாளர்கள் சேர்க்கப்பட்டிருந்த போதிலும் மா நகர சபை கட்டளை சட்டத்தின் பிரிவு 100 இன் பிரகாரம் வடிகால்கள் ஏதும் சுத்திகரிக்கப்பட்டு இருக்காததுடன் அவர்களில் ஏழுபேர் சுகாதார பிரிவின் ஏனைய கருமங்களுக்காகவும் ஒருவர் சுகாதார பிரிவில் காணப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | பதவியணி எண்ணிக்கை போதியளவாக காணப்படாமையால் வடிகால்களை சுத்தம் செய்யும் அலுவல்களுக்காக தேவைப்பாட்டின் மீது ஈடுபடுத்தப்பட்டிருந்தது என. | வடிகால்களை சுத்தம் செய்தல் செயற்திட்ட தொழிலாளர்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு இறுதித் திகதியளவில் ஊழியர் கடன் மீதி, இடமாற்றம் பெற்று சென்றுள்ள, ஓய்வு பெற்றுள்ள மற்றும் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ள 40 உத்தியோகத்தர்களிடம் ரூபா 298,040 தொகை 10 வருடங்களை விட மிகையான காலம் முதலும் 3 உத்தியோகத்தர்களிடம் ரூபா 67,620 தொகை 3 இற்கும் 5 வருடத்திற்கும் இடைப்பட்ட காலம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | ஓய்வுபெற்றிருந்த, வேலை இடைநிறுத்தப்பட்டிருந்த அனைத்து ஊழியர்களுக்கும் கடிதங்கள் அனுப்பப்பட்டது என. | ஊழியர் கடன் மீதிகள் அறவீடு செய்யப்பட வேண்டும். |